1970 மார்ச் 14]

ஆராய்ந்து, அந்தத் தண்ணீரில் கெடுதல் இல்லை என்று முடிவு செய்த பிறகு, லைசென்ஸ் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டேன். அந்த நிலைமைகளை ஆராய்ந்து அறிந்ததற்குப் பிறகு, சுகாதார அதிகாரிகள் அனுமதி வழங்க சிபாரிசு செய்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஆணையாளர்கள் அனுமதி வழங்குகிறார்கள்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வரும் அந்தக் கழிவுநீரை வெளியே கொண்டு வருவதால், அது அங்குள்ள ஜனங்கள் குடியிருக்கும் இடங்களில் தேங்கி, அதனால் தொத்துநோய் ஏற்படுகிறது. எனவே, அந்தக் கழிவுநீரை உடனடியாக அகற்ற வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சாரதி அவர்களும், திரு. பொன்னுமலை அவர்களும் இதைப்பற்றிக் கேட்டுவிட்டார்கள். அதே கேள்வியைத் திரும்பப் போடுகிறீர்களே.

திரு. எம். அப்துல் கபூர் சாகிப்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது மூன்று பேர் விண்ணப்பம் செய்திருப்பதாகக் கூறியுள்ளார்கள். I. A. Ismail & Co., M. A. Khizon Hussain & Co., A. M. Shafullah & Co. ஆகியவர்களுக்கு இதுவரையிலும் இயந்திரம் அமைக்க அனுமதி கிடைக்கவில்லை என்று நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதில் அவர்கள் யாராவது இருப்பார்களா என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவலின் அடிப்படையில், மூன்று விண்ணப்பங்கள் போடப்பட்டு, மூன்று விண்ணப்பங்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தவிர தனியாக மேலும் விவரங்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்புவாரேயானால், தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்களைச் சேகரித்துத் தரலாம்.

Infant Jesus Basic Training School for Women in Mulagumoodu

* 373 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(a) whether the advance grant for the year 1968–69 and 1969–70 was paid by the Education department of the Government of Tamil Nadu to Infant Jesus Basic Training School for women in Mulagumoodu in Kanyakumari district;

(b) whether there is any delay in the payment; and

(c) if so, the reason for the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவரவர்களே, பள்ளிகள் சாதாரணமாக ஜூன் மாதத்திலே ஆரம்பித்தாலும், 'டீச்சர்-பியூப்பில் ரேஷியோ'வில் ஆசிரியர்களை நிர்ணயம் செய்யும் முறை இல்லை. சுமார் 6 மாத காலமாக 'டீச்சர்-பியூப்பில் ரேஷியோ' முறையில் நிர்ணயம் செய்ய முடியாமல் உள்ளது. டி.பி.ஐ. ஆபீசில் பேப்பர் நின்று போய்விடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, 'டீச்சர்-பியூப்பில் ரேஷியோ' முறையில் ஸ்டாஃப்களை பிக்ஸ் பண்ண சீக்கிரம் பைசல் செய்யுமாறு டி.பி.ஐ. ஆபீசிற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 'Extension of the provisions of the Grant-in-Aid coda' படி பள்ளிகள் வைக்கின்ற முறையில் அந்த ஆண்டுக் கணக்கை ஆடிட் செய்த பிறகு அளிக்க வேண்டியிருக்கிறது. 1968-69-ம் ஆண்டுக்கான கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டு, குறிப்பிட்ட பள்ளிக்கூடத்திற்கு 6,800 ரூபாய் வழங்க இப்பொழுது முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் இந்தத் தேதியிலிருந்து என்பதற்கான நிலைமைகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. எவ்வளவுக் கெவ்வளவு விரைவில் ஆடிட் செய்து கணக்குகள் கொடுக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் நிதி உதவி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Electric Crematorium in Madras

* 374 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to instal electric crematorium in Madras City?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை, ஐயா.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, சென்னையிலே உள்ள பல இடுகாடுகளைப்போல, பல நகராட்சிகளிலே சொந்தமாக இடமில்லாமல் இருக்கின்றன. எனவே, நகராட்சிகளைப் பொறுத்த வரையிலும், நல்லமுறையில் சுடுகாடு அமைக்க அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது மின்சார சுடுகாடு ஏற்படுத்துவது பற்றியது. மின்சார சுடுகாடு ஏற்படுத்த வேண்டுமென்று சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஒரு வரைவுத் திட்டத்தை மாநகராட்சி மன்றத்தில் வைத்தார்கள். ஆனால் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மக்களிடத்தில் எதிர்ப்பு உணர்ச்சி ஏற்படும் என்று சொல்லி நிறுத்தி